



# துளிர்

குழந்தை பாலியல் கொடுமை தடுப்பு மற்றும் குணப்படுத்தும் மையம்




சென்னையில் உள்ள, 'துளிர் - குழந்தை பாலியல் கொடுமை தடுப்பு மற்றும் குணப்படுத்தும் மையத்தை' நிறுவியவர்கள் பற்றிய விபரத்தை, இன்றைய உலகத்தில் அதிலும் நாம் சார்ந்து இருக்கும் தேடல் இயந்திரத்திலேயோ, சமூக ஊடகத்திலேயோ, கிடைப்பது மிகவும் அரிது. பத்து வருடத்துக்கு மேல் செம்மையாக இயங்கி வரும் ஒரு அரசு சாரா நிறுவனத்துக்கு, இது கொஞ்சம் ஆச்சரிய மூட்டும் விஷயம் தான்.

இந்த அரசு சாரா, லாப நோக்கற்ற நிறுவனத்தில் பணிபுரியும் இந்த மையத்தின் இரண்டு நிறுவனர்கள் (மொத்தம் நான்கு பேர்) மற்றும் சமூக சேவகர்கள் வித்யா ரெட்டி, நான்சி தாமஸ் அவர்களைச் சந்திதோம். குழந்தை பாலியல் கொடுமைக்காக

அவர்களின் திட்டங்களுக்கான நீண்ட விரிவான பட்டியலில் முக்கிய இடம் பெறுவது: இலக்கியல் தொழில்நுட்பமும் பாலியல் கொடுமையும் சேர்ந்து குழந்தைகளுக்கு எதிராக விளைவிக்கும் பிரச்னைகளை எதிர்கொள்ளுதல்; குழந்தைகள் சேவை மையங்களுக்கு 'குழந்தை பாதுகாப்பு திட்டங்கள்' வகுக்க உதவுவதல்


இவர்கள் செய்யும் வேலையில் முக்கியப் பங்கு பெறுவது பொதுக் கல்வி திட்டம், தகவல் வளங்களை உருவாக்குதல், ஆதரவு வலைதளங்களை உருவாக்கி வலுப்படுத்துதல், முக்கியமாக பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கும் அவர்களின் குடும்பத்தாருக்கும் சட்ட உதவி மற்றும், உளவியல் ரீதியான சிகிச்சைக் கொடுப்பதல் ஆகும். சட்டமன்ற முயற்சிகளையும், கொள்கைகளையும் நடைமுறைப் படுத்தக் கூட்டணிகளை வளர்ப்பதோடு, தொழிற்முறைப் பிரிவினருக்காக தொழில்நுட்ப உதவியும், பயிற்சியும் ஆகியவை செய்வதும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

தன் சேவைக்கான உயர்ந்தப் புகழை அடைந்தும், துளிர் என்றுமே தன் சுய விளம்பரத்துக்காக ஆர்வம் காட்டியதில்லை. 'அதனால் என்ன நன்மை பயக்கும்? குழந்தை பாலியல் கொடுமைப் பற்றிய விழிப்புணர்ச்சியை உருவாக்க உதவாத எந்த ஒரு விஷயத்திலேயும் எங்களுக்கு விருப்பமில்லை. வித்யாவும், நானும் இதில் முக்கியம் இல்லை. நடக்கும் குற்றங்களிலிருந்து கவனம் எங்கள் பக்கம் திரும்பக் கூடாது' என்று சொல்கிறார் நான்சி.

அவர்களின் திட்டங்களுக்கான நீண்ட விரிவான பட்டியலில் முக்கிய இடம் பெறுவது: இலக்கியல் தொழில்நுட்பமும் பாலியல் கொடுமையும் சேர்ந்து குழந்தைகளுக்கு எதிராக விளைவிக்கும் பிரச்னைகளை எதிர்கொள்ளுதல்; குழந்தைகள் சேவை மையங்களுக்கு 'குழந்தை பாதுகாப்பு திட்டங்கள்' வகுக்க உதவுவதல்; குழந்தை பாலியல் கொடுமை தடுப்பு பற்றி சமூகப் பிரச்சாரம் செய்தல்; ஊனமுற்ற குழந்தைகளுக்கு பாலியல் கொடுமை தடுப்பு பற்றி சொல்லிக் கொடுத்தல்; நடத்தை சரியில்லாத இளைஞர்களுக்கு புரிதலில் உதவுதல்; பொது நிறுவனங்களுக்கு அவர்களின் பாலியல் கொடுமை தலையீடு திட்டங்களில் உதவுதல்; குழந்தைகளுக்கு எதிரான பாலியல் கொடுமை பற்றி எப்படி ஊடகத்தில் காட்ட வேண்டும் என்று அமைத்து கொடுத்தல் ஆகும்.

2004-ல் துளிர் தொடங்கப்பட்டது முதல், சிதராத முழு கவனத்துடன் எப்போதும் மாறிக் கொண்டிருக்கும் நிதர்சனத்துக்கு ஏற்றார் போல் செயல்பட்டு வருவதே அதன் தனி சிறப்பாகும். வேறு வேறு கல்வி பிண்ணனியிலிருந்து வந்த மூன்று இளம் தொழில்நுட்ப சமூக சேவகர்களுடன், பணியில் பல தரப்பட்ட அனுபவம் கொண்ட திமிங்கலமும், (அடுத்தவர்களின் வயதோடும், அனுபவத்தோடும் ஒப்பிட்டு தன்னை இப்படி சொல்லிக் கொள்வது வித்யாவுக்கு பிடிக்கும்) சேர்ந்து துவங்கிய துளிரின் தலையாயநோக்கம் - குழந்தை பாலியல் கொடுமைப் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதும், அதன் தாக்கத்தின் விளைவுகளுக்கு சிகிச்சை அளிப்பதும் ஆகும். அவர்கள் வேலையின் மிக முக்கிய அம்சமாக இருப்பது எந்த ஒரு விதமான அதிர்ச்சியையோ, அச்சத்தையோ ஏற்படுத்தாமல், அதே சமயம் குடும்பத்தினருக்கான பங்கை எடுத்துரைத்து, குழந்தைகள் அதை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்று போதித்து, மன தைரியமும் கொடுக்கிறது. 'எங்கள் மையத்துக்கு சின்னம் வடிவமைப்பதிலிருந்து, பொது நிகழ்வுகளுக்கு தானாக முன் வந்து தொண்டு செய்வது வரை எமக்கு உதவியாக இருக்கும் இந்திய குடும்பங்களும், நண்பர்களும் எங்கள் நிறுவனத்துக்கு ஒரு மிகப்பெரிய பக்க பலமாகும்' என்று சொல்கிறார் நான்சி.

துளிர் ஆரம்பிக்க காரணம் எந்த ஒரு விதமான தனிப்பட்ட நிகழ்வோ, தருணமோ கிடையாது. குழந்தைகள், பாலியல் கொடுமையை எதிர்கொள்வதற்கான புரிதலும், விபரங்களும் அறவே இல்லை என்பதையும், முக்கியமாக வினோதமான பாலியல் கொடுமைகளும், அதற்கு காட்டப்படும் குறைந்த அக்கறையும், இறுதியில் அதற்கு குழந்தைகளே பலியாகின்றனர் என்பதையும் நாங்கள் நால்வரும் உணர்ந்தோம்.




இந்த நிறுவனத்தை ஆரம்பித்த போது, சமூகத்தினரிடமிருந்து எதிர்ப்பு இருந்தது. குடும்பமும், சுற்றத்தாரும் மட்டுமின்றி சமூகமும் இதில் முக்கிய பங்கு கொள்ள வேண்டும் என்ற புரிதல் இல்லை. ஆனால் படித்தவர்கள், காவல் துறை, கல்வித் துறை, நீதித் துறை, மருத்துவத் துறை, ஊடகத் துறை இதர பலர், பாலியல் கொடுமையை எதிர்கொள்வதற்கான கொள்கைகள், சட்ட திட்டங்கள் வகுப்பதை தம் பொறுப்பாகக் கருதினர். இந்த வடிவை வகுப்பதற்கு முன், நால்வரும் சேர்ந்து உருவாக்கிய திட்டங்களில் புதுமையும், களங்கமற்ற துணிச்சலும் தெரிந்தது.

துளிர் தன் இலக்கை அடைந்ததா? 'இது முடியும் செயல்பாடு இல்லை. ஆனால், நிச்சயம் முன்னேற்றம் உள்ளது' என்று சொல்கிறார் நான்சி. 'இன்னும் சமூகத்தின் ஒரு பெரிய பகுதி அக்கறையின்றி பொறுப்பற்று தான் உள்ளனர் எனினும், பத்து வருடத்துக்கு முன் இருந்ததை விட, இப்போது இந்த பிரச்னை இருக்கிறது என்று ஒப்புக் கொள்வதே குழந்தைகளுக்கு பாதுகாப்பு வளையத்தின் முதல் படி ஆகும்' என்று சொல்கிறார் வித்யா.

சிறு வயதில் நடந்த பாலியல் கொடுமையால் வாழ்வின் உகந்த நிலை அடைய முடியாதவர்களைப் பார்க்கும் வருத்தம், தாம் கொண்ட பொறுப்பு, கடமை அவர்களை ஏதாவது செய்ய தூண்டியது. சிறிய நிறுவனமாக இருப்பதால் இருக்கும் பெரிய தடைகளை நன்கு அறிந்ததால், அதையே தமக்கு சாதகமாக்கி ஒரு திட்டத்தை எடுத்து, கொஞ்சம் பாதீடு ஒதுக்கி, ஏதேதோ செயல்திட்ட முறைகளில் மாற்றத்தைக் கொண்டு வந்து அதன் மூலம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தினர்.

பாலியல் கொடுமையை எதிர்கொள்ள தேவையான புரிதலை அதிகரிக்க வேண்டும் என்ற லட்சியம் இருந்தாலும், துளிருக்கு பெரிய திட்டம் எதுவும் இல்லை. ஆனால், இது தொடர்பான வழக்குகளை பதிவு பண்ண எப்போதும் வேலை செய்யும் பதிதல் ஒருங்கியத்தை உருவாக்கினால் பாதிக்கப்பட்டவர் களுக்கு ஒரு நம்பிக்கை ஏற்படும் என்பதில் ஆர்வம் காட்டினர். பாலியல் கொடுமையை முழுதுமாக அழிப்பது நடைமுறையில் சாத்தியமில்லை என்று தெரியும் ; ஆனால் குறைக்கவும், தடுக்கவும் முடியும் என்று சொல்கிறார் வித்யா. தடுக்கும் முயற்சியில் ஆர்வத்தோடு வேலை செய்யும் இவர், அமைதியாக பார்வையாளர்களாக மட்டும் இருப்பவர்களையும் துடிப்பாக பங்கேற்க வைத்து சமூகத்தில் ஒரு மற்றத்தை கொண்டு வருவதே முன்னேறுவதற்கான வழி என்று நம்புகிறார்.

இவற்றை எல்லாம் சாதிக்க, துளிர் ஒரு தனி நிறுவனமாக இயங்க வேண்டும். '2004-ல், சமூகப் பணியில் முதுகலை படிப்பு படிக்கும் போது, என் பாடதிட்டத்தின் சார்பாக ஒரு குழந்தை நல அமைப்பில், பயிற்சியில் இருக்கும் போது, அங்கு தன்னார்வ தொண்டில் ஈடுபட்டிருந்த வித்யாவை சந்தித்தேன்' என்று நினைவு கூர்கிறார் நான்சி. ஏற்கனவே விதிக்கப்பட்டது போல், மற்ற இரு இணை நிறுவனர்கள் அலங்கார், விபின் அவர்கள் கலந்து கொண்ட அதே மாநாட்டில் வித்யாவும், நான்சியும் இருந்த போது ஒருவரை ஒருவர் சந்தித்ததில் அனைவருக்கும் ஒரே நோக்கம், லட்சியம் இருப்பது தெரிந்தது. இந்தியாவில் பிறந்து அமெரிக்காவில் சமூக வேலை செய்யும் லோஇஸ் எங்கில்ப்ரெச் இவர்களின் வழிக்காடியாக இருப்பதோடு, இங்கு பாலியல் கொடுமைக்கான எந்த விதமான பயிற்சியோ படிப்போ எதுவும் இல்லாததால், தேவையான ஆரம்பப் புரிதலைக் கொடுத்தார். அதுபோல், துளிரின் அறங்காவலர்கள் திருமதி. ஆண்டாள் தாமோதரன், கீதா ராமசேஷன் அவர்கள் தமக்கு உறுதுணையாக இருந்து, அவ்வப்போது தடுமாறும் போது வழிகாட்டுவதற்கு தங்களின் நன்றிகளை தெரிவிக்கின்றனர்.

துளிர் செய்யும் அனைத்தும், பேர் வைக்கப்பட்டது முதல் வித்யாவும், நான்சியும் குழுவாக செயல்படுதல் வரை, ஒவ்வொரு செயல்பாடும் மிகவும் கவனமாக, உணர்வுபூர்வமாக எடுத்த முடிவாகும். துளிர் என்பதற்கு இரண்டு அர்த்தம் - சின்ன மிருதுவான இலை ; மிகுந்த கஷ்டத்திற்கு பிறகு இலை முளைவிடுவது - இவை இரண்டும் துளிர் செய்யும் வேலையின் முக்கிய அம்சமாகும் - தடுத்தல்; சிகிச்சை அளித்தல். இது சரியான சாரமாக இல்லையனினும், இந்த பெயர் ஒரு பொது பிரச்னையின் மௌனத்தைக் கிழித்து அரிக்கும் என்று நம்புகிறோம்.